O.S.No.359/2023 – Date : 10.02.2026

DW1 – ரங்கசாமி(எ)செல்வம்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்கத் தெரியும் என்றால் சரி. வாதிக்கு நான் 05.03.2021ம் தேதி எழுதி கொடுத்த புரோநோட் குறித்து 22.5.2023ம் தேதி வழக்கறிஞர் மூலம் வாதி சட்ட அறிவிப்பு அனுப்பினார், அதை நான் 24.05.2023ம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றால் சரி. அந்த சட்ட அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி. அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னர் எத்தனை நாள் கழித்து நான் வாதியிடம் கேட்டேன் என்றால் 4 நாட்கள் கழித்து நான் வாதியிடம் சென்று கேட்டேன். மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்திலும் பதிலுரையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. வாதி, எனது வீட்டிலிருந்து 13 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சீரகாபாடியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரி.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1–தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையதுதான் என்றால் சரியல்ல. மேற்படி கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது அல்ல என்று எனது பதிலுரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்து என்னுடையது

இல்லை என்பதை நிரூபிக்க தடய அறிவியல் துறையிக்கு மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்த மனுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நானும் வாதியும் வாய்மொழியாக பேசிக்கொண்டோம் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறி உள்ளேன், ஆனால் என்ன விவரம் பேசினோம் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. 05.03.2021ம் தேதி நாடு முழுவதும் முழுமையான ஊரடங்கு அமலில் இருந்தது என்பதை காண்பிக்க நான் அரசாணை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 05.03.2021 கால கட்டத்தில் முழுமையான ஊரடங்கு இல்லை என்றும் தளர்வுடன் ஊரட்ங்கு இருந்தது என்றால் சரியல்ல.

எனது வீட்டிற்கு தெற்கே குப்பிச்சிபாளையம், வையப்பமலை ஊர்கள் உள்ளது என்றால் சரி. 05.03.2021ம் தேதி நானும் தமிழ்மணியும் வாதியின் வீட்டிற்கு சென்று ரூ.18,00,000/- தொகை பெற்றுக்கொண்டு வந்தோம் என்றால் சரியல்ல. இவற்றை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து காவல்நிலையம் 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரி. வாதி சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் பணம் பெற வில்லை என்று

கூறி புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரி. தாவா புரோநோட்டை வாதி மோசடியாக தயார் செய்துள்ளார் என்று நான் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நானும் விவசாயம்தான் செய்து வருகிறேன் என்றால் சரி. வாதியும் விவசாயம் செய்து வந்தார் என்றும் வாதி அவரது நிலத்தை விற்று வைத்திருந்த பணத்தைதான் எனக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல.

புரோநோட்டில் உள்ள கையெழுத்தும் கைரேகையும் என்னுடையது இல்லை என்று நான்தான் நிரூபிக்க வேண்டும் என்றும் அது வாதியின் கடமை இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 புரோநோட் 05.03.2021 தேதி என்னால் எழுதி கொடுக்கப்பட்டது என்பது உண்மை என்பதால்தான் நான் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களை பார்க்காமலேயே புரோநோட்டை எழுதி கொடுக்கவில்லை என்றும் அதிலுள்ள கையெழுத்தும் கைரேகையும் என்னுடையது இல்லை என்றுபொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ரூ.18,00,000/– தொகையை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர்

என்றால் சரியல்ல, நான் பணமே வாங்கவில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-S.Sumathy,

Principal District Judge, Salem.